பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# Learning and Teaching of Devotional Literature

**R. Manjula Devi,** Assistant Professor of Tamil, N.M.S.S.V.N.College, Nagamalai, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0001-0762-2641**
**DOI: 10.5281/zenodo.20841282**

## Abstract

*From ancient times to the present, bhakti literature and worship have walked together with the lives of Tamils. They cannot be separated. Apart from Saiva and Vaishnava bhakti works, many other spiritual books continue to appear today. This enriches both the Tamil language and the practice of worship. Tamil remains the language of devotion. It still holds a prominent place. The works such as the Twelve Tirumurai and the Nalayira Divya Prabandham are composed with complete grammatical elegance. These songs are well-suited for both writing and reading. By studying them, one can live a happy and blessed life. The creative power of these songs is fully revealed through this. From a psychological viewpoint, full worship supports peace and physical health. Bhakti literature also offers opportunities to learn stories that convey deep meaning. Whether these stories are imagined or true, they offer good messages and moral conduct to people. The difficulties in learning and teaching bhakti literature lie mainly in reading and writing the words without mistakes, and in understanding the meaning properly. This weakness is found among some people. If these shortcomings are removed, learning and teaching bhakti literature will become even more effective and will become certain.*

**Keywords:** Tamil Literature, Devotional Literature, Learning, Teaching.

## References

[1] Karthikesu Siva Thambi. *Tamil Ilakkiyathil Mathamum Manudamum Ilakkiya Varalattru Aivu*. New Century Book House Pvt. Ltd., Chennai, 1994.
[2] Muthaiya, K. *Tamil Ilakkiyangal Kurum Varka Samuthayam*. Sikaram Veliyidu, Chennai.
[3] *Learner Learning*. TNOU Puthiya Padatthittu Nool, Bharathi Pathippagam, Coimbatore.
[4] Sankar, Ve. *Iyal Tamil Ilakkanam*. 2nd ed., Deva Offset, Chennai, 2006.
[5] Thiruvalluvar. *Thirukkural*. Manivasagar Pathipagam, Chennai.
[6] Vasanthi, S. *Tamil Karpithal*. 1st ed., Bharathi Pathippagam, Coimbatore, 2013.
[7] Subramaniya Sarma, Thiru. *Sri Nalayira Divya Prabandham*. Gangaip Puthaka Nilayam, Chennai.
[8] Meyyappan, S. *Thiruvasagam Moolamum Uraiyum*. Manivasagar Pathippagam, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# பக்தி இலக்கியம் கற்றல் கற்பித்தல்

**இரா. மஞ்சுளா தேவி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0001-0762-2641**

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம் வரையில் பக்தி இலக்கியம் இறைவழிபாடுகளும் தமிழர்களின் வாழ்வியலோடு பிரிக்க முடியாது ஒன்றாக நடை போட்டுக் கொண்டுள்ளது சைவ வைணவ பக்தி இலக்கியங்கள் அல்லாது இன்றைக்கு ஆன்மீக ரீதியான பல்வேறு நூல்கள் வெளிவந்த வண்ணமாக உள்ளது இதனால் தமிழ் மொழியும் இறை வழிபாடும் சிறப்புறுகிறது பக்தியின் மொழி தமிழ் என்பதோடு இன்றைக்கும் மேலோங்கிய நிலையிலேயே உள்ளது பன்னிரு திருமுறை நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற பல்வேறு பக்தி இலக்கிய பாடல்கள் அனைத்தும் முழுமையான இலக்கண நயத்துடன் அமையப்பெற்று எழுதுவதற்கும் வாசிக்க வாசிப்பதற்கும் ஏற்றவாறு இப்பாடல்கள் அச்சம் கற்பித்தலின் நிறை அருளுடன் இன்பமான வாழ்வு வாழலாம் என்பது பாடல்களின் படைப்பாற்றலை முழுமையாக அறியப்படுகின்றது உளவியல் நோக்கில் நிறை வழிபாடு அமைதிக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் உறுதுணையாக உள்ளது பக்தி இலக்கியங்களால் நிறை வெளிப்பாட்டு கதைகள் அறிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பாகவும் அமைகிறது கதைகள் கற்பனை என்றாலும் சரி உண்மை என்றாலும் சரி மனிதருக்கு நல்ல செய்திகளையும் நல்லொழுக்கத்தையும் நல்குவதாக அமைந்துள்ளது பக்தி இலக்கியத்தை கற்றல் கற்பித்தல் இவற்றில் ஏற்படும் இடர்பாடுகள் என்றால் குறிப்பாக பாடல்களின் சொற்களை பிழையின்றி வாசித்தன் எழுதுதல் பொருள் புரிந்து கொண்டதன் என்பதில் ஏற்படும் குறைபாடாகவே ஒரு சிலரிடம் காணப்படுகிறது இதற்கு காரணம் தமிழ் மொழியை முழுமையாக பிழை இன்றே கல்லாத நிலையும் கற்பதில் ஒருவரின் கவனக்குறைவுமே காரணமாக கொள்ளலாம் நீ குறைகளை நீக்கினால் பக்தி இலக்கியம் கற்றல் கற்பித்தல் மேலும் சிறப்புற்று விளங்கும் என்பது திண்ணம்.*

**குறிப்புச்சொற்கள்**: தமிழ் இலக்கியம், பக்தி இலக்கியம், கற்றல், கற்பித்தல்.

## முன்னுரை

உலகில் தோன்றி வாழ்கின்ற உயிரினங்கள் தம்முடைய உணர்ச்சியை ஒலியின் வாயிலாக வெளிப்படுத்துகின்றன. மனிதன் மட்டுமே அவ்வொலிக்கு சிறிது சிறிதாக பொருள் தரும் விதமாக கருத்துக்களை வெளிப்படுத்தும் கருவியாக எழுத்து வடிவம் கொடுத்து மொழியை உருவாக்கியுள்ளான். அவ்வகையில் தமிழ் மொழியானது கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடியினரால் பேசப்பட்ட மொழி என்பர் ஆதலால் தமிழ் மொழியை தேவர்களின் மொழி என்றும் பக்தியின் மொழி என்றும் கூறுவதுண்டு. மக்கள் முதன்முதலில் தோன்றிய நிலப்பகுதி லெமூரியா எனப்படும் குமரிக்கண்டம் என்று தமிழ் இலக்கியங்களில் அறிய முடிகிறது. இவர்கள் பேசிய மொழியே உலக முதல் மொழியான பழந்தமிழ் மொழி என்று கருதப்படுகிறது. மனித வாழ்க்கையை இலக்கியமாக இலக்கணத்துடன் வகுத்துக் கொடுத்த பெருமை நம் தாய் மொழியான தமிழ் மொழிக்கு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

உரியதாகும். தமிழ் மொழியின் தனிச்சிறப்புக்களில் குறிப்பிடத்தக்கது ஐந்திணை இலக்கணமாகும். ஐந்து இலக்கணமான எழுத்து சொல் பொருள் யாப்பு அணியினாலே அழகுற தெய்வத்தன்மையை நிலை நிறுத்தும் இலக்கியம் பக்தி இலக்கியமாகும். தமிழ் மொழியின் மூலமாக எண்ணிலடங்கா இலக்கியங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்திருந்தாலும். இறையுனர்வை வெளிப்படுத்தும் பக்தி இலக்கியம் கற்றல் கற்பித்தல் என்ற தலைப்பின் வாயிலாக காணலாம்.

**கற்றல்**

கற்றல் என்பது நமது அனுபவங்களின் வாயிலாக பெறப்படும் படிப்பினையே கற்றல் எனலாம் ஒருவரின் அனுபவம் பயிற்சி இவற்றின் விளைவாக நம்முடைய நடத்தையில் ஏற்படும் மாற்றமே கற்றல் எல்லாம் கற்றல் என்பதற்கு உளவியலாளர்கள் பல்வேறு வரையறைகளை கொடுத்துள்ளனர். 1946யில் கேட்ஸ் என்பவர் அனுபவம் பயிற்சி இவற்றின் மூலம் நடத்தை மாற்றமே கற்றல் என்கிறார். ஒவ்வொருவரும் சூழ்நிலைக்கேற்றவாறு தங்களின் நடத்தைகளை மேம்படுத்துவதையே கற்றல் குறிப்பிடுகிறது என்கிறார் கார்டனர்மர்பி. எனவே கற்றல் என்பது அனுபவங்களின் விளைவாக தோன்றும் வெளிப்பாடு எனவும் அவை ஒரு முடிவில்லாத வளர்ச்சி என்றும் கருதலாம்.

**கற்பித்தல்**

கற்றல் நிகழ்வில் கற்பிக்கக் கூடியவர் குருவாகிய ஆசிரியர் ஆவார். கற்பித்தலின் வாயிலாக ஒருவரை முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்லலாம் கற்றலில் கற்பூரம் பங்கு முழுமையாக இருந்தாலும் சூழலும் சூழ்நிலைகளும் அவற்றில் ஒரு பங்களிக்கின்றது புரூக்ளின் வாய்ப்பாட்டில் கற்பித்தலை அறிவுசார் உணர்வு சார் மற்றும் செயல் சார் களங்களாக பகுத்துள்ளார். இவற்றின் அடிப்படையிலேயே கற்பித்தல் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

**பக்தி இலக்கியம்**

தமிழ் மொழி தோன்றியதன் விளைவாக தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்களும் நீதி இலக்கியங்களும் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தன அவற்றைத் தொடர்ந்து பக்தி இலக்கியங்களும் தோற்றம் பெற்றன. கி.பிஆறாம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கிய காலம் என்று கூறுகின்றனர் இக்காலகட்டத்தில் தான் பக்தி இலக்கியங்கள் தோன்றி வளர்ச்சி அடைந்தன தமிழர்கள் இயற்கை வழிபாடு தொடங்கி இறைவழிபாடுகளால் சமய நல்லொழுக்கங்களும் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தன பிற சமய கோட்பாடுகள் தமிழர்களின் நல்லொழுக்கங்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தின அதன் விளைவாக பக்தி இயக்கங்கள் தோற்றம் பெற்றன. பக்தி இயக்கங்களில் சமயக் குரவர்கள் தோன்றி மக்களிடையே நல்லொழுக்கங்களை எடுத்தியம்பி மனித வாழ்வில் உன்னத நிலையை அடையச் செய்வது இறை வழிப்பாடு என்ற கருத்தை தமிழ் மொழியில் பாடல்களின் வாயிலாக மக்களிடையே பரப்பச் செய்தனர் இறை வழிபாட்டு பாடல்களை பின்னர் பக்தி இலக்கியங்களாக உருப்பெற்று வளர்ச்சி அடைந்து உள்ளது என்று கருதலாம்.

> **தெய்வத்தை தன்னிலைப்படுத்தி மனித உறவு அடிப்படையில் தெய்வத்துடன் உறவு கற்பித்து கொண்டு அந்த உறவின் அடிப்படையில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதே பக்தி அனுபவத்தின் அச்சாணியாகும். (தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கிய வரலாற்று ஆய்வு, ப. 15)**

இவ்வாறு பக்தி இயக்கங்களில் சிவனை வழிபடக் கூடியவர்கள் சைவ சமயத்தவர் என்றும் திருமாலை வழிபடக்கூடியவர்கள் வைணவ சமயத்தவர் என்றும் அழைக்கப்பட்டனர்.சைவ சமயத்தவர் பன்னிரு திருமுறைகளையும் வைணவ சமயத்தவர் நாலாயிர திவ்ய

பிரபந்தத்தையும் தமிழ் மொழியில் இறைவனின் சிறப்புகளை எல்லாம் பக்தி இலக்கியங்களாக எளிதில் இறையருள் வேண்டி கற்கள் கற்பித்தல் வாயிலாக மனித நல்லொழுக்கத்தை வளர்க்க பெரிதும் பாடுபட்டனர்.

**பக்தி இலக்கியங்களின் கருவும் பயனும்**

பக்தி இலக்கியங்களை கற்றல் கற்பித்தலின் வாயிலாக தமிழரின் மரபுசார் வாழ்க்கை நிகழ்வுகளை அறிய முடிகின்றது பக்தி இலக்கியங்களின் கருவாக இருப்பது இறைவனும் இறை அடியவர்களும் ஆகும் சைவ சமயத்தில் சிவனைப் பற்றியும் வைணவ சமயத்தில் திருமால் பற்றியும் புராணக் கதைகளை வரலாற்று நிகழ்வுகளை கற்றல் கற்பித்தல் மூலமாக அறிய முடிகிறது இறை அடியவர்களின் நாயன்மார்கள் ஆழ்வார்களின் வாழ்வியல் செயல்களையும் கற்றல் கற்பித்தல் வாயிலாக அறியப்படுவதால் மனித வாழ்வில் உள்ள நன்மை தீமைகளை அறிந்து செயல்பட ஏதுவாக அமைகிறது மனிதன் ஒழுக்க நிலையில் வாழ்ந்தாலே பிறவாத பேரருளான இறையடியை அடைய முடியும் என்பதும் இறை நூல்களால் உணர முடிகிறது சைவ குரவர் ஆன மாணிக்கவாசகர் உயிர்களின் தோற்றம் வளர்ச்சி போன்றவற்றை பாடும்போது

**புல்லாகிப் பூண்டாய் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாம் பாம்பாகிக்**
**கல்லாகி மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லகர ராகி முனிவராய் தேவராய்ச்**
**செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் (திருவாசகம், சிவ புராணம், பா. 6)**

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் என்று ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை உயிரினங்களின் பிறப்பு படிநிலையை பாடுவதோடு இறுதியில் எல்லா பிறப்பும் பிறந்து இன்ப துன்பம் எல்லாம் முடிந்து விட்டது இனி பிறவாத வரம் தரக்கூடியது உன் திருவடியை எனக்கு வேண்டும் என்று பாடுகின்றார் இவற்றின் வாயிலாக உலக உயிரினங்களைப் பற்றியும் அதற்கான நிலை தன்மையையும் நாம் பக்தி இலக்கியம் கற்றல் கற்பித்தல் மூலமாக அறிய முடிகின்றது.

**வைணவ அடியவரான திருமழிசை ஆழ்வார் இறைவனை**
**ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி அல்லவற்று உள்ளாயுமாய்**
**ஐந்து மூன்றும் ஒன்றும் ஆகி நின்ற ஆதி தேவனே**
**ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி அந்தரத்து அணைந்து**
**நின்று ஐந்தும் ஐந்தும் ஆய நின்னை யாவர் காண வல்லரே. (நா.திவ்., பா. 754)**

என்று ஐம்பூதங்களாக இருப்பவரும் ஐம்புலன்களாக நம்முள் இருப்பவரும் இறைவனே என்று எடுத்தியம்பி உலகம் நீர் நிறம் காற்று வானம் பூமி இவற்றை உள்ளடக்கி அமைந்துள்ளது என்றும் அவ்விடத்தே உயிரினங்கள் ஐம்பொறிகளுடன் பிறந்து வாழ்ந்து வருகிறது இவற்றிற்கு காரணம் இறைவனே அவரின் திருவடிகளையும் பிறவிப்பினியை போக்க வல்லது என்று எடுத்த இயம்புவதாக கருத முடிகிறது எனவே பக்தி இலக்கியத்தின் கருப்பொருளாகவும் பயணமாகவும் உள்ளவன் இறைவன் என்பதை கற்றல் கற்பித்தலின் வாயிலாக உணர்வதுடன் உலகின் தோற்றம் மனிதனின் தோற்றம் மற்றும் மரபுசார் கதைகளையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

**தமிழ் மொழித்திறனை வளர்த்தல்**

பக்தி இலக்கியங்களில் உள்ள பாடல்களான தேவாரம் திருவாசகம் நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற பக்தி பாடல்கள் பேசவும் பொருள் உணர்ந்து படிக்கவும் பிழையின்றி

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

எழுதுவதற்கு ஏற்றவாறு தாய் மொழியான தமிழ் மொழியில் பாடல்கள் அமைந்துள்ளதால் தமிழ் மொழியின் கற்றல் கற்பித்தல் திறன்கள் வளர்கின்றன தாய்மொழியான தமிழ் மொழியில் இறை அனுபவம் சார்ந்த பாடல்கள் அமைந்துள்ளதால் உள்ளத்தின் எண்ணத்தை முழுமையாக வெளிப்படுத்தும் திறனை அறிவதுடன் சொற்களின் பொருளை தெளிவாக உணர முடிகிறது.

**இலக்கணம் உணர்தல்**

இலக்கியத்திலிருந்து இலக்கணம் வந்தாலும் இலக்கணம் இன்றி மனிதனால் மொழியை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது என்பதை பத்தி இலக்கிய பாடல்கள் அமைந்திருப்பதிலிருந்து காண முடிகிறது. மனித வாழ்க்கையில் பேசும் போதும் எழுதும் போதும் படிக்கும் போதும் பிழையின்றி அமைய ஐந்திலக்கணம் ஆன எழுத்து சொல் பொருள் யாப்பு அணி இலக்கணம் பெரிதும் துணை புரிகிறது அவற்றுடன் திணை பாடம் கால வினா விடை மரபு வலுக்களை தவிப்பதற்கு இலக்கணம் துணை புரிகிறது யாப்பு செய்யுளை வடிவமைக்கவும் பணி செய்யுளை அழகு படுத்துவதற்கும் உண்டான நெறிமுறைகளாக திகழ்கிறது. நினைத்தாலும் அமைப்பு முறையில் பாடப்பட்ட பாடல்களை பக்தி இலக்கியங்களாக அமைந்துள்ளது. தமிழ் மொழியில்

> **இலக்கம் உடம்பு இடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
> **கையாறாக் கொள்ளாதாம் மேல் (குறள் - 627)**

இலக்கியத்தினை தாய் என்றால் இலக்கணத்தினை அதன் சேய் என்று குறிப்பிடலாம். இலக்கில் தளிர்ந்த பயன் மரத்தில் கனிந்த கனியே இலக்கணம் என்பர் அறிஞர். (இயல் தமிழ் இலக்கணம், ப. 6) இவ்வாறு பக்தி இலக்கியங்களில் அமைந்துள்ள பாடல்களால் இலக்கண அமைப்பு முறைகளையும் கற்றல் கற்பித்தல் மூலம் உணர முடிகின்றது.

**கலைத்திறனை உருவாக்குதல்**

கலை என்பது மனித வாழ்க்கையில் ஏதேனும் ஒன்று உருவாக்கி அவற்றின் வாயிலாக மகிழ்ச்சி பயன் ஏற்படுமானால் அவை கலை எனலாம். மனித வாழ்க்கையின் இன்ப துன்ப நிகழ்வுகளில் வெளிப்பாடு இலக்கியம் எனலாம் எனவே இலக்கியத்தனோடு கலையும் அடங்கப் பெறுவதாக கருத முடிகிறது.

> **இன்பமான இசையில் தினந்தோறும் காலையும் மாலையும் கோவில்களிலும் மதங்களிலும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மக்களை பக்தி பாடல்களை பாட வைத்து பாடல்களுக்கு ஏற்ற பாடல்களையும் உருவாக்கி கதை இலக்கியங்களையும் எழுத்தோவியங்களையும் சிற்பங்களையும் வண்ண சித்திரங்களையும் சைவர்களும் வைணவர்களும் உருவாக்கினர். (தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம்)**

என்று நம் நூலில் கூறுகிறார் கே முத்தையா. பக்தி இலக்கியங்களில் அமைந்துள்ள பாடல்களும் பல்வேறு படைப்பு கலைகளை ஒன்றிணைத்து அவற்றின் வாயிலாக கற்றல் கற்பித்தல் வெளிப்பட்டு மேமாபடுகிறது.

> **கலைகளின் தோற்றத்திற்கான காரணமாக டாக்டர் நோவா நான்கு காரணங்களை குறிப்பிட்டுள்ளார். 1. தன் உணர்ச்சியை வெளியிடும் விருப்பம் 2.பிறருடைய வாழ்விலும் செயலிலும் நமக்கு உள்ள அக்கறை 3. கற்பனை உலகத்தினை அடைப்பதில் உள்ள ஆர்வம் 4.ஒளி கோடு வண்ணம் சொல் முதலியவற்றிற்கு அழகிய வடிவம் தந்து அமைப்பதில் உள்ள ஆசை. (சிறப்பு தமிழ் கற்றல், ப. 8)**

மேற்கண்டவாறு பக்தி இலக்கியங்களால் அமையப்பெற்றுள்ள பாடல்கள் ஒலி, செயல், இலக்கண முறை ஆகியவற்றை சரியான சொற்களைக் கொண்டு அழகிய வடிவம் கொடுத்து பக்தி இலக்கிய பாடல்களாக உருவாகி கற்ற கற்பித்தலுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

கவிதைகளை யாப்பினால் ஒன்றிணைக்கும் போது அவ்விடத்தை இசையும் உருவாகி தோற்றம் பெறுகிறது. அவ்வகையில் இறைவனை அடைவதற்கான ஒரே வழி அவரின் புகழை பாடுவதும் அவரின் புகழினி கேட்பதும் வாழ்வினை மெய்வடையச் செய்யும் என்ற ஆன்றோர் கருத்துக்களை பக்தி இலக்கிய பாடல்களாக உருவாகிய கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

**உளவியலில் பக்தி இலக்கியம்**

உளவியல் என்பது அடிப்படையில் மனிதனின் நடத்தை பற்றிய கல்வியாகும் **"மனிதனின் உடல் மற்றும் உள்ளச் செயல்பாடுகள் அனைத்தும் நடத்தையை அடிப்படையாகக் கொண்டது என்கிறார் மெக்யூக்கல்" "மனித வாழ்வில் எந்த ஒரு வெளிப்பாடும் ஒரு செயல் எனப்படும் என்கிறார் வுட் வொர்த்" (கற்றல் கற்பித்தல், ப. 2)** அறிவு சார் அனுபவங்களை எளிமையான முறையில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் நிகழ்வுகளை மனிதனின் நினைவு, சிந்தனை, மொழி வளர்ச்சி, புலன் உணர்வு, கற்பனை, மற்றும் பிற மன செயல்பாடுகளையும் உள்ளடக்கியவாறு கொடுப்பதே கற்றலாகும். அவ்வகையான கற்றல் கற்பித்தலை உள்ளடக்கியதே பக்தி இலக்கியம் ஆகும்.

**பக்திப் பயணம்**

பக்தி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு களப்பயணங்களாக பக்தி பயணங்கள் மேற்கொண்டு திருக்கோவில்களுக்கும் ஆன்மீக இடங்களுக்கும் சென்று உற்று நோக்கினால் அவ்விடங்களில் சிறப்புக்களும் பயன்களும் நம் நினைவில் என்றென்றும் நீங்கா வண்ணம் நிலைத்திருக்க செய்கிறது. இந்நிகழ்வு பக்தி இலக்கியங்களை கற்றல் கற்பித்தல் மூலமே ஏற்படுகிறது.

**ஒழுக்க மேலாண்மை**

பக்தி இலக்கியச் செய்திகளை கற்றல் கற்பித்தல் மூலமாக அறிந்து கொண்டால் இறைவனுக்கு பயப்படுகிறோம் என்ற எண்ணத்தில் தனி மனிதன் ஒவ்வொருவரும் தவறு செய்ய இயலாது தனி ஒருவர் ஒழுக்கம் மேம்படுவதுடன் சமுதாயத்தில் தீய செயல்கள் செய்யும் எண்ணங்களிலிருந்து மனிதர்கள் விடுபட்டு மேன்மை அடைய வழிகாட்டுகிறது. இறைவழிபாட்டின் உன்னத நோக்கமே இப்பிறவியல் நல்லது செய்து மறுபிறப்பின்றேன் இறைவனடியை தேடுவதே ஆகும். அதற்கான வழி வகைகளை கற்றல் கற்பித்தல் மூலமாக எடுத்து இயம்புவது பக்தி இலக்கியங்களாகும்.

**பக்தி இலக்கியம் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் இடர்பாடுகள்**

பக்தி இலக்கியங்களை கற்றல் கற்பித்தலின் இப்போது அவற்றில் ஏற்படும் இடர்பாடுகளாக அடிப்படையில் அமைவது வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகும் இவ்வுலக்கியங்களில் அமைந்துள்ள பாடல்களை சொல் பிரித்து பொருள் புரிந்து வாசிப்பதில் தயக்கம் ஏற்படுதல் முதன்மையாக உள்ளது. அதற்கான காரணம் சரியான மொழி அறிவு இலக்கண புலமை இன்மையால் பிழை ஏற்படுகிறது எனலாம். நடைமுறை பேச்சு வழக்கு அல்லாத தூய தமிழ்ச் சொற்களை இவ்விலக்கியங்களில் பயன்படுத்தி உள்ளதால் அச்சொற்களை நான் தமிழ் சொல் என்றே எண்ணுவதில்லை இவை கற்று கற்பித்தலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பத்தி இலக்கிய பாடல்களில் உள்ள வார்த்தைகளை உற்று நோக்கி கவனித்து பார்த்து சரியான உச்சரிப்பு முறைகளை பயன்படுத்தாததாலும் கற்றல் கற்பித்தலில் பாதிப்பு ஏற்படுகிறது. மரபுசார் வரலாற்று நிகழ்வுகளை நான் அறிவதால் எனக்கு என்ன பயன் என்று கேட்கும் ஒரு சில இளைய தலை முறைலற்ற பொறுமையற்ற போக்கும் பக்தி இலக்கியங்கள்

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

கற்றல் கற்பித்தலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இறைவனே நம் முன் நேரில் நடனம் ஆடுவது போல் காட்சிகளை கொடுக்கும்செயற்கை நுண்ணறிவியல் ஆன ஏஐ தொழில்நுட்பம் மிகைப்பட்டு உள்ள கணினி யுகத்தில், பக்தி இலக்கியங்கள் கற்றல் கற்பித்தலால் என்ன பயன் ஏற்பட போகிறது என்ற ஒரு சில மனிதர்களின் எண்ணத்தினாலும் பக்தி இலக்கியங்கள் கற்றல் கற்பித்தலில் பாதிப்பு ஏற்படுகிறது.

**முடிவுரை**

மக்களிடையே இறைவழிபாட்டு உணர்வையும் தமிழ் மொழி உணர்வையும் உறங்கிய கொண்டு செல்வது பக்தி இலக்கியங்கள் ஆகும் இதனால் மொழிப்பற்றோடு இறைப்பற்றும் வளர்கிறது மனிதன் சமூகத்தில் சக மனிதர்களோடு நல்லிணக்கத்துடனும் வாழ்வியலில் ஒழுங்கு நெறியுடனும் தனித்துவ இந்த வாழ்வு வாழ பக்தி இலக்கியங்களை கற்றல் கற்பித்தல் வழியாக உறுதுணையாகிறது. புராணக் கதைகள் கற்பனை என்றாலும் அக்கதைகளில் இடம்பெற்றுள்ள இடங்களுக்கு களப்பயணங்களாக மேற்கொண்டு அவ்விடங்களை காணுவதால் அங்குள்ள உண்மை நிகழ்வுகளோடு ஒப்பிட்டு உணர முடிகிறது பக்தி இலக்கியம் இறை வழிபாட்டிற்காக உருவானது என்று கருதினாலும் தமிழரின் கலை பண்பாடு கலாச்சாரம் நாகரிகம் வாழ்வியல் நெறிமுறைகள் போன்றவற்றை எழுத்து போடுவதாக உள்ளது எனவே இலக்கியத்தை கற்ற கற்பித்தலில் ஒரு சில குறைபாடுகளை கூறினாலும் பக்தி இலக்கியங்களை விருப்பத்துடன் தமிழ் மொழி உணர்வுடன் பிழையின்றி கவனத்தோடு பொருள் உணர்ந்து எழுதும், வாசிக்கும் பழக்கம் மேற்கொண்டால் பக்தி இலக்கியங்கள் கற்றல் கற்பித்தல் சிறப்பான மேன்மையுற்று இருக்கும்.

**குறிப்புகள்**

[1] கார்த்திகேசு சிவ தம்பி. *தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கிய வரலாற்று ஆய்வு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி .லிட், சென்னை, 1994.
[2] முத்தையா, கே. *தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம்.* 2nd ed., சிகரம் வெளியீடு, சென்னை, 1981.
[3] *Learner learning*. TNOU புதிய பாடத்திட்ட நூல், பாரதி பதிப்பகம், கோயம்புத்தூர், 2016.
[4] சங்கர், வே. *இயல் தமிழ் இலக்கணம்.* தேவா ஆப்செட், சென்னை, 2006.
[5] திருவள்ளுவர். *திருக்குறள்.* மணிவாசகர் பதிப்பகம். சென்னை.
[6] வசந்தி, எஸ். *தமிழ் கற்பித்தல்.* பாரதி பதிப்பகம், கோயம்புத்தூர், 2013.
[7] சுப்பிரமணிய சர்மா, திரு. *ஸ்ரீ நாலாயிர திவ்யப் பிரபந்தம்.* கங்கைப் புத்தக நிலையம், சென்னை.
[8] மெய்யப்பன், ச. *திருவாசகம் மூலமும் உரையும்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி**: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் Creative Commons Attribution4.0 கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.